**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**OS.No.138/2023 P.W.1**

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | |
|---|---|
| பெயர் | தாமோதரன் பிள்ளை |
| த/பெ. | கோபால் பிள்ளை |
| வயது | 75 |
| வசிப்பிடம் | யாதவர் தெரு, வாயலூர் கிராமம், திருக்கழுக்குன்றம் |
| தொழில் | விவசாயம் |

**முதல் விசாரணை 31.07.2026**

செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம், வாயலூர் கிராமம், யாதவர் தெருவில் வசிக்கும் தாமோதரன் த/பெ.கோபால் பிள்ளை, வயது 75 ஆகிய நான் இந்த வழக்கில் வாதி. இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

1. 15.04.1968 தேதியிட்ட வாதியும், 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளின் தந்தையும் வாங்கிய கிரய பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1.

2. 13.10.2021 தேதியிட்ட 2 முதல் 4 பிரதிவாதிகள் முதல் பிரதிவாதி பெயரில் எழுதப்பட்ட விடுதலை பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2.

3. 16.10.2020 தேதியிட்ட வாதி மற்றும் 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளின் தந்தை பெயரில் உள்ள பட்டா கணினி நகல் வா.சா.ஆ.3.

4. 13.10.2021 தேதியிட்ட 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளின் தந்தை பெயரில் உள்ள பட்டா கணினி நகல் வா.சா.ஆ.4.

5. 18.10.2019 தேதியிட்ட வில்லங்க சான்று அசல் வா.சா.ஆ.5.

6. 29.09.2022 தேதியிட்ட வில்லங்க சான்று கணினி நகல் வா.சா.ஆ.6.

7. 17.02.2023 தேதியிட்ட 5வது பிரதிவாதியிடம் கொடுக்கப்பட்ட தடை மனு அசல் வா.சா.ஆ.7.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக 08.09.2026க்கு ஒத்தி வைக்கப்படுகிறது)